# DEPOSITION OF WITNESS

## (Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)
## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1, SANKARI.

| | | | |
|---|---|---|---|
| Case No | : C.C.226/2025 | Date | : 24.11.2025 |
| Deposition of Witness for | : அ.சா.1 | Taluk | : |
| Name | : பெரியசாமி | Calling | : |
| Father Name | : ஈஸ்வரன் | Religion | : |
| Village | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 24.11.2025.

(எதிரி ஆஜர் இல்லை. எதிரி சார்பில் கு.வி.மு.ச பிரிவு 317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).

**அரசு தரப்பு முதல் விசாரணை :**

1) நான் தற்போது தூத்துகுடியில் வசித்து துறைமுகத்தில் வேலை செய்து வருகிறேன். எனது சொந்து ஊர் நாமக்கல் மாவட்டம், குமாரபாளையம், காவேரி நகர் ஆகும். எனது குலதெய்வம் செட்டிமாங்குறிச்சி, கார்த்தி கனக்கனூர் ஆகும். கடந்த 06-03-2025 ம் தேதி, காலை சுமார் 08.00 மணியளவில் நானும், எனது மனைவி மரியா ஆக்னஸ் மற்றும் எனது 05 மாத குழந்தையுடன் எனது இருசக்கர வாகனத்தில் குமாரபாளையத்தில் இருந்து எடப்பாடி செல்லும் சாலையில் உள்ள பள்ளக்காடு, காந்தி நகர் பேருந்து நிறுத்தம் அருகே சாலையின் இடதுபுறமாக சென்றுகொண்டிருந்தோம்.

2) அப்போது, எங்களுக்கு எதிரே ஒரு இருசக்கர வாகனம் வேகமாக வந்துகொண்டிருந்தது. அந்த இருசக்கர வாகனம் தள்ளாடிகொண்டு வந்துகொண்டிருந்தது. அவர் என்ன நினைத்தாரோ என்று தெரியவில்லை, குறுக்காக

வந்து எங்கள்மீது மோதிவிட்டார். மோதியவுடன் நான் சுமார் 10 அடி தூரம் தள்ளி விழுந்துவிட்டேன். எனக்கு வலது காலிலும், எனது மனைவிக்கு கையிலும் அடிப்பட்டது. எனது குழந்தைக்கு அடிபடவில்லை. என்மீது மோதிய இருசக்கர வாகனத்தின் ஓட்டுநரை பார்த்தால் என்னால் அடையாளம் காட்ட இயலும்.

3) பின்னர், அடிப்பட்ட நாங்கள் எடப்பாடி அரசு மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சையில் சேர்ந்தோம். போலிசார் மருத்துவமனை வந்து என்னிடம் புகார் வாக்குமூலம் பெற்று சென்றனர். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான் (**புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தனர்.

**<u>குறுக்கு விசாரணை</u>** :-

1) சம்பவ இடத்திற்கு எத்தனை மணிக்கு சென்றேன் என்றால் காலை சுமார் 08.00 மணிக்கு சென்றேன். சம்பவத்தன்று போலிசார் என்னை விசாரித்தார்களா என்றால் இல்லை, மறுநாள் விசாரித்தார்கள். அதன்பின்னிட்டு, போலிசார் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரிதான். சம்பவ இடம் சற்று வளைவான பகுதி என்றால் சரிதான். குமாரபாளையம் நோக்கி செல்லும்போது சற்று மேடாகவும், எடப்பாடி நோக்கி வரும்போது சம்பவ இடம் இறக்கமாகவும் உள்ளது என்றால் சரிதான்.

2) நான் இறக்கமான பகுதியில் வேகமாக சென்று எதிரிமீது மோதி எதிரிக்கு பலத்த அடிப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரிக்கும், இந்த விபத்திற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

Sd/-S.Sathiya,
Judicial Magistrate No.1,
Sankari.

Sd/-Periyasamy

# DEPOSITION OF WITNESS

(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1, SANKARI.

| | | | |
|---|---|---|---|
| Case No | : C.C.226/2025 | Date | : 24.11.2025 |
| Deposition of Witness for | : அ.சா.2 | Taluk | : |
| Name | : மரியா ஆக்னஸ் | Calling | : |
| Husband Name | : பெரியசாமி | Religion | : |
| Village | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 24.11.2025.

(எதிரி ஆஜர் இல்லை. எதிரி சார்பில் கு.வி.மு.ச பிரிவு 317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).

**அரசு தரப்பு முதல் விசாரணை :**

1) நான் தற்போது தூத்துகுடியில் வசித்து வருகிறேன். எனது கணவரின் சொந்த ஊர் நாமக்கல் மாவட்டம், குமாரபாளையம், காவேரி நகர் ஆகும். எங்களது குலதெய்வம் செட்டிமாங்குறிச்சி, கார்த்தி கனக்கனூர் ஆகும். கடந்த 06-03-2025 ம் தேதி, காலை சுமார் 08.00 மணியளவில் நானும், எனது கணவர் பெரியசாமி மற்றும் எனது 05 மாத குழந்தையுடன் எனது கணவர் இருசக்கர வாகனத்தை ஓட்டிக்கொண்டு நாங்கள் பின்னார் அமர்ந்து கொண்டு குமாரபாளையத்தில் இருந்து எடப்பாடி செல்லும் சாலையில் உள்ள பள்ளக்காடு, காந்தி நகர் பேருந்து நிறுத்தம் அருகே சாலையின் இடதுபுறமாக சென்றுகொண்டிருந்தோம்.

2) அப்போது, எங்களுக்கு எதிரே ஒரு இருசக்கர வாகனம் வேகமாக வந்துகொண்டிருந்தது. நான் அதை பார்த்ததும் வண்டி வேகமாக

வந்துகொண்டிருக்கிறது என்று கூறினேன். அதற்குள் அந்த இருசக்கரவாகனத்தை ஊள்ளே கொண்டு வந்து எங்கள் இருசக்கர வாகனத்தின்மீது மோதிவிட்டார். மோதியவுடன் நானும், எனது குழந்தையும் பக்கத்தில் விழுந்துவிட்டோம். எனது கணவர் சற்று தள்ளி விழுந்துவிட்டார். எனது கணவருக்கு வலது காலிலும், எனக்கு வலது கையில் லேசான அடிப்பட்டது. எனது குழந்தைக்கு அடிபடவில்லை. என்மீது மோதிய இருசக்கர வாகனத்தின் ஓட்டுநரை பார்த்தால் என்னால் அடையாளம் காட்ட இயலும்.

3) பின்னர், அடிப்பட்ட நாங்கள் எடப்பாடி அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்ந்தோம். இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தனர்.

<u>குறுக்கு விசாரணை</u> :-

1) நான் இருசக்கர வாகனம் வேகமாக வருகிறது என்று கூறியவுடன் எனது கணவர் இருசக்கர வாகனத்தை நிறுத்தியிருக்கலாம் என்றால் கண் இமைக்கும் நேரத்தில் வந்து மோதிவிட்டார். எனது கணவர் தான் இருசக்கரவாகனத்தில் வேகமாக சென்று மோதிவிட்டார் என்றால் சரியல்ல. போலிசார் என்னை விசாரித்தார்களா என்றால் மறுநாள் விசாரித்தார்கள்.

2) எனது கணவர் தான் இறக்கமான பகுதியில் வேகமாக சென்று எதிரிமீது மோதி எதிரிக்கு பலத்த அடிப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரிக்கும், இந்த விபத்திற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

Sd/-S.Sathiya,
Judicial Magistrate No.1,
Sankari.

Sd/-Mariya Aknas